விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 243 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 02 சனிக்கிழமை (19.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கடும் தடைகளுக்கு மத்தியில்
# ஆதிசிவன் ஐயனாருக்கு
# குருந்தூரில் பொங்கல்



(முல்லைத்தீவு)

கடுமையான அச்சுறுத்தல்கள், தடைகளுக்கு மத்தியில் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் நிகழ்வு நேற்று பக்தி பூர்வமாக சிறப்பாக இடம்பெற்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## பொங்கலை குழப்பிய பிக்கு விரட்டியடிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் தமிழ் மக்கள் அமைதியான முறையில் நேற்று பொங்கலில் ஈடுபட்ட போது பொங்கலை சீர்குலைப் பதற்கு பௌத்த பிக்கு ஒருவர் முயற்சி

15

## ஏட்டிக்குப் போட்டியாக பௌத்தர்களும் வழிபாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர்மலை யில் நேற்று தமிழர்களின் பொங்கல் வழிபாடு இடம்பெற்ற நிலையில் ஏட்டிக்குப் போட்டியாக பௌத்தர் களும் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

குருந் தூர் மலையில் நேற்று பொங்கல் வழிபாடு

15



## 13ஆவது திருத்தத்தில் மாகாண சபை அதிகாரங்கள் ஆராயப்படுகின்றது
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத் திலுள்ள மாகாண சபை அதி காரங்கள் தொடர்பில் ஆராயப் பட்டுவருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

மாகாண ஆளுநர்களுட னும் பிரதம செயலாளர்களு டனும் ஜனாதிபதி செயலகத் தில் நடந்த சந்திப் பின்போதே ஜனாதி

15

## குருந்தூர்மலையில் பலத்த பாதுகாப்பு

(முல்லைத்தீவு)

குருந்தூர்மலையில் நேற்று பலத்த பாது காப்பு போடப்பட்டிருந் தது. குறித்த பகுதியில் இராணுவம் மற்றும் பொலி

16



## யாழில் வன்முறையில் ஈடுபட்ட 9 பேர் கைது
### வாள்கள், கைக்கோடரி, மோ.சைக்கிள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெண் களின் ஆடைகளை அணிந்தவாறு



15

## மிருசுவிலில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட உசன் - மிருசு வில் பகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மதியம் 70 வயதான முதியவர் ஒருவர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

15

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக
### மீண்டும் சிறீசற்குணராஜா நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட்

15

## நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷேட கலந்துரையாடல்

(கொழும்பு)

மின்சாரத்துறையின் மறுசீரமைப்பு தொடர்பில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் (JICA) அதிகாரிகளுடன் மின் துறை சீர்திருத்தங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள், பசுமை மறுசீரமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.(ம-7)

# பாரம்பரிய உணவுத் திருவிழாவும் தூவானம் 100 ஆவது திரையிடலும்

(யாழ்ப்பாணம்)

மாபெரும் பாரம்பரிய உணவு திருவிழாவும் தூவானம் 100 ஆவது திரையிடல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கலைஞர் கௌரவிப்பும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் பல்கலைக்கழக முற்றத்தில் தூவானத்தின் 100 ஆவது திரையிடலும் பாரம்பரிய உணவுத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

உணவுத் திருவிழாவில் பல ஆரோக்கிய, பாரம்பரிய உணவு வகைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. (ம-7)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேதாக்கன்னி கந்தசாமி கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 14 இலட்சமும் 18 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு :-
ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**

(16756)


# 16 வயது மாணவி சடலமாக மீட்பு

சூரியாரா செவனகல இந்துனில்புர பகுதியில் 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் வீடொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாணவியை செவனகல வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் மாணவி ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

சிறுவயதிலேயே தந்தை இழந்த குறித்த மாணவி தாயாருக்கு நிலையான வருமானம் இல்லாத நிலையில் நெலும் சிறிகமவில் உள்ள சிறிய வீடொன்றில் வசித்து வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் விசேட பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் செவனகல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குடும்பத்தில் நிலவும் கடும் நிதி நெருக்கடி காரணமாக குறித்த மாணவி கடும் விரக்தியில் வாழ்ந்து வந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனியார் வகுப்பு ஆசிரியையின் விருந்து வைபவமொன்றில் பங்கேற்க முடியாமல் மாணவி மிகுந்த ஏமாற்றத்தில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மாடியில் இருந்து விழுந்த பல்கலை மாணவன் பலி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர் ஒருவர் விடுதி கட்டிடத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஹோமாகம, தியகமவில் உள்ள தொழில்நுட்ப பீடத்தில் கல்வி கற்கும் 26 வயதுடைய மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் இருந்து தவறி விழுந்த நிலையில், மாணவர் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அங்கு அவர் உயிரிழந்துள்ளார். கட்டிடத்தில் இருந்து மாணவன் வீழ்ந்தமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், உயிரிழந்த மாணவர் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்ற சந்தேகம் நிலவுவதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஹோமாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)


**கார், வான் குத்தகைக்கு தேவை**

தனியார் நிறுவனத்திற்கு கார்கள்/ வான்கள் மாதாந்த குத்தகைக்கு தேவை.

**077 839 5849**

(16757)





## எனது 32 ஆண்டு ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

## நாளை (20.08.2023) ஈசுரவிநாயகரின் பாற்காவடித்தினம்

வாருங்கள்! பாற்காவடி எடுத்திடுவோம் - பாலாபிஷேகம் செய்திடுவோம். வாருங்கள்!

**பாலாபிஷேகம் நேரம் மு.ப 7.00 மணி முதல் மு.ப 9.30 மணிவரை. சதுர்த்தி உற்சவம் மு.ப 10.00. மணியளவில் ஆரம்பமாகி ஸ்நபனாபிஷேகம் விஷேட பூஜை வழிபாடுகளுடன் சுவாமி வீதி உலா நடைபெறும்.**

*என் அன்பு உள்ளங்களே!*
19.07.2022 வலம்புரிப் பத்திரிகையில்.........

ஈசுரவிநாயகர் நாடு பறிபோமாப்போல ஒரு நிலையை ஏற்படுத்த திருவுளம் கொண்டுள்ளார் என்று ஐயா கூறியிருந்தேன். தற்போது நாட்டில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவங்களையும் நாம் உற்று நோக்கினால் இது நன்றாகப் புலப்படுவதுடன் யாவும் ஈசுரவிநாயகரின் திருவிளையாடல்களே என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே! அடக்குவித்தால் யார் ஒருவர் அடங்காதாரே! என்பதை உணர்வோமாக:

**தற்போதைய அரசியல் நிலை :-**

ஒரு நாட்டில் ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். கடந்த கால வரலாறுகளைப் புரட்டினால் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் அரசியல் தலைவர்களை ஏமாற்றிய நிகழ்ச்சிகளே நிறைய உண்டு. எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும் என்பதற்கமைய தற்போது தெய்வ நிர்ப்பந்தம் ஒன்றினால் தான் சிங்கள அரசியல் தலைவர்களை அடிபணிய வைக்க முடியும். இன்று சிங்கள அரசியல் தலைவர்களை நம்புவதற்கு நாம் தயாரில்லை. இதுவரை ஏமாற்றிய சிங்கள தலைவர்கள் இனியும் ஏமாற்ற முடியாது. ஈசுரவிநாயகரிடம் இவர்கள் இனித்தப்ப முடியாது.

சந்திரிகா அம்மையாரைப் பற்றி அண்மையில் வலம்புரிப் பத்திரிகையில் "மீண்டும்" சந்திரிகா என்று எழுதியிருந்தேன். எமது இனப்பிரச்சினை எந்த ஒரு ஆண் அரசியல்வாதியாலும் தீர்க்க முடியாது. பெண் அரசியல் (சந்திரிகா அம்மையார்) தலைமையினால் மட்டும் தீர்க்க முடியும். ஈசுரவிநாயகரின் திருவாக்கு என்பதால் அறிக. அம்மையாரின் நிலை வள்ளி திருமண நிலைப்பாடு. இன்னும் கூறுவதானால் கந்தபுராணத்தை புரட்டிப் பார்ப்போமேயானால் முருகப்பெருமான் வள்ளியைத் திருமணம் செய்வதற்காக வேடனாக வருகின்றார். வள்ளியோ இடம் கொடுக்கவில்லை. பின்னர் கிழவராக வருகின்றார். அப்போதும் வள்ளியின் நிலை மாறவில்லை. வள்ளி யானை ஒன்றுக்குத்தான் பயம் என்று அறிந்ததும் அண்ணன் ஆனைமுகனை நினைக்கின்றார். உடனே யானை வருகின்றது. யானையும் வள்ளியின் மனோநிலையை எப்படி என்று முருகனுக்கு காட்டுவதற்காக வந்து வந்து போகின்றது. வள்ளியும் கிழவரை ஏமாற்றித் தப்புகின்றாள். ஆனால் மூன்றாவது முறையாக வந்த யானையுமோ போகவில்லை. வள்ளியுமோ தப்ப முடியவில்லை. வள்ளியின் மனோநிலை அறிந்த கிழவர் சத்தியத்தைக் கேட்கின்றார். ஒன்றும் செய்ய முடியாத நிர்ப்பந்தத்தில் சத்தியம் கொடுக்கின்றாள்.

அதிலிருந்து ஒருவரை நெடுக ஏமாற்ற முடியாது. ஏமாற்றியவர் என்றோ ஒரு நாள் ஏமாறியே ஆக வேண்டும் என்பது தெளிவாகின்றது. அத்தோடு விநாயகர் முருகனுக்கு எவ்விதம் யானையாக வந்து அவரது விருப்பம் நிறைவேற உதவினாரோ அதேபோன்று தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறிட ஈசுர விநாயகர் யானையாக (இந்தியாவாக) வந்து திருவருள் புரிவார்.

**"அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்று நின்று அறுக்கும்"**

**18.08.2023**

(16755)

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும் பரிபாலகரும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதக் கலவரத்தை தடுக்க சட்ட நடவடிக்கை எடுங்கள்

## நீதியமைச்சரிடம் சரத் வீரசேகர வலியுறுத்து

(கொழும்பு)

**குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இனமுரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நீதிய மைச்சரிடம் வலியுறுத்தியுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



குருந்தூர் மலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் வழிபாடு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகளை அழிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

குருந்தூர் விகாரையில் உள்ள பௌத்த மத புராதன சின்னங்கள் தமிழ் அரசியல் வாதிகளின் ஆதரவுடன் அழிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர் மலையில் இந்து வழிபாடுகள் மூலம் இடம் பெறும் இன முரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன் எனத் தெரிவித்தார். (நி)

# வறட்சியான காலநிலையால் பால் உற்பத்தி பாதிப்பு

(கொழும்பு)

நிலவும் வறட்சியான காலநிலையினால் உள்நாட்டு பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கால்நடை பிரிவுக்கு விவசாய அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வறட்சியான காலநிலையை கருத்திற் கொண்டு கால்நடை வளர்ப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறைத்துக் கொள்ளமுன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# 3 ஆம் தர மாணவர்களுக்கு எழுத்தறிவு மட்டம் குறைவு

## யுனிசெப் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் மூன்றாம் தரத்தில் கல்வி கற்கும் 85 வீதமான மாணவர்கள் எழுத்தறிவு மற்றும் எண் கணித அறிவை குறைந்தபட்ச நிலையிலேனும் எட்டவில்லை என யுனிசெப் எனப்படும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலைமை குழந்தைகளின் இடைநிலைக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் எதிர்கால வாழ்வில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என யுனிசெப் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் சுமார் 3 வருடங்களாக பாடசாலைகள் மூடப்பட்டதனால் அல்லது இடைநிறுத்தப்பட்டமையினால் ஆரம்பப் பிரிவை சேர்ந்த 1.6 மில்லியன் பிள்ளைகள் கல்வியை இழந்துள்ளதாக யுனிசெப் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனை நிவர்த்தி செய்ய கல்வி அமைச்சும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து மாணவர்களுக்கு மூன்று வருடங்கள் தவறவிட்ட கல்விக் காலத்தை மீள வழங்குவதற்கான தேசிய வேலைத் திட்டத்தை கடந்த புதன் கிழமை கொழும்பில் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# குடிநீர் விநியோகம் 9 வீதத்தால் குறைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாளாந்த குடிநீர் வழங்கல் திறன் தற்போது 9 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதனால், மக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை அறிவுறுத்தியுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச். சபை வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பின் மூலம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

## நில ஆக்கிரமிப்பிற்காக இவ்வருடம் மட்டும்

# 25,000 ஏக்கர் வனங்கள் தீக்கிரை

## சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக இந்த வருடம் மாத்திரம் 25,000 ஏக்கர் வனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

வறட்சியான காலப்பகுதியிலேயே திட்டமிட்ட குழுக்கள் காடுகளை தீக்கிரையாக்குகின்றன என நில மற்றும் விவசாய சீர்திருத்தத்திற்கான இயக்கத்தின் சஜீவ சாமிகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், அரசாங்கம் எடுத்துள்ள தவறான கொள்கைகளால் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இந்த வருட ஆரம்பத்தில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி காடுகளில் உள்ள நிலங்களை 11 மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்களிற்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தார்.

ஆனால் இந்த நிலங்களை பல்வேறு தனியார் நிறுவனங்களிற்கு வழங்க அரசாங்கம் விரும்புகின்றது. இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவும் அரசாங்கம் முயல்கின்றது என அவர் தெரிவித்தார். (நி)


அமரர்கள் திரு.திருமதி மார்க்கண்டு விதானையார் நாகம்மா

ஞாபகார்த்த பேருந்து தரிப்பிட திறப்புவிழா



07.11.1919 தோற்றம் 10.07.1926

25.07.2000 மறைவு 28.03.2013

திரு.மார்க்கண்டு — திருமதி.நாகம்மா விதானையார்.

அமரர்கள் திரு. திருமதி மார்க்கண்டு விதானையார் நாகம்மா அவர்களின் ஞாபகார்த்த பேருந்து தரிப்பிட திறப்பு விழா நிகழ்விடம் ஆனையிறவு, நடராசர் சிலையடி முன்பாக 19.08.2023 இன்று 11.00 மணிக்கு.

முன்னாள் கிராம உத்தியோகத்தர் திருமதி.நாகம்மா அவர்கள் ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, துணுக்காய், கண்டாவளை,குமரபுரம் கிராம சேவையாளர் பிரிவுகளில் சிறந்த கிராம சேவையாளராகக் கடமை ஆற்றியவர்.

பொதுமக்களுக்கு தன்னலமற்ற சேவையாற்றியவர்.

ஆனையிறவு மண்ணில் வாழ்வாதார உதவிகளைகிராம மக்களுக்குச் செய்த முன்னாள் கிராம சேவையாளர் அவர்கள் நினைவாக இந்தப் பேருந்து தரிப்பிடத் திறப்பு விழா நிகழ்வு நடைபெறுவதை ஏற்று பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆனையிறவு வாழ் மக்கள்.

(C-7091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இருபது-20 இல் நியூஸிலாந்து வெற்றி



ஐக்கிய அரபு அமீரகம் சென்றுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடுகின்றது.

முதலாவது போட்டி டுபாயில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் முதலில் துடுப்பாடிய நியூசிலாந்து 6 விக்கெட்டுக்கு 155 ஓட்டங்களை சேர்த்தது.

அதிகபட்சமாக டிம் செய்பெர்ட் 55 ஓட்டங்களும் கோலே மெக்கோன்சி 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

அடுத்து களம் இறங்கிய ஐக்கிய அரபு அமீரகம் 19.4 ஓவர்களில் 136 ஓட்டத்தில் ஓல்-அவுட் ஆனது.

இதன் மூலம் நியூசிலாந்து 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. விக்கெட் கீப்பர் அரியான்ஷ் ஷர்மா அரை சதம் விளாசியும் பலன் இல்லை. நியூசிலாந்தின் அணித் தலைவர், வேகப் பந்து வீச்சாளருமான டிம் சவுதி 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.

அவரது சிறந்த பந்து வீச்சு இதுவாகும். 2 ஆவது 20 ஓவர் போட்டி இதே மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. (4)

# ஜப்னா கிங்சை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் காலி

லங்கா பிரீமியர் லீக் இருபது-20 தொடரின் முதலாவது வெளியேற்றுப் போட்டியில், பி-லவ் கண்டி அணி வெற்றி பெற்று இரண்டாவது இறுதிப் போட்டிக்கான தகுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில், பி-லவ் கண்டி அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது இறுதிப் போட்டிக்கான தகுதிப் போட்டியில் காலி டைடன்ஸ் அணியை எதிர்கொள்கின்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணியும் பி-லவ் கண்டி அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பி-லவ் கண்டி அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 188 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.



இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமட் ஹரிஸ் 79 ஓட்டங்களையும் தினேஸ் சந்திமால் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில், நுவான் துசார 4 விக்கெட்டுகளையும் மகேஷ் தீக்ஷன மற்றும் அசேல குணரத்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 189 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய லைக்காவின் ஜப்னா கிங்ஸ் அணி, 17.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பி-லவ் கண்டி அணி வெற்றி பெற்றது.

இதன் போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சொயிப் மாலிக் 31 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பி-லவ் கண்டி அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 6 விக்கெட்டுகளையும் முஜிப் உர் ரஹ்மான், நுவான் பிரதீப் மற்றும் சஹான் ஆராச்சிகே ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பந்துவீச்சு சார்பில் 6 விக்கெட்டுகளை சாய்த்த வனிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2893

தனுப்பிரியா

கபடி,கிரிக்கெட்,
டென்னிஸ்னு
ஆயிரம் விளையாட்டு
இருந்தாலும்
இந்த கடவுளுக்கு
எப்போ பார்
நம்ம கூட
விளையாடுறதே
பொழப்பா போச்சு..



கோபினா

கணவன்- காலண்டர்ல
என்ன பாக்குற?
மனைவி- பல்லி விழும்
பலன்.
கணவன்- நான் பாக்குறேன்
பல்லி எங்க விழுந்தது?
மனைவி- நீங்க சாப்பிட்ட
சாம்பார்ல...



சலீமா

கனமழை இருக்கு ஓவர் ஓவர்..



மழையே இல்ல ஓவர்.. ஓவர்..

வசந்த்

மன்னா எதிரி நாட்டு மன்னன்
பேஸ்புக் பிறண் றிக்குவஸ்ட்
கொடுத்திருக்கிறான் என்ன செய்ய?



அவனை புளக் பண்ணு அந்த நாட்டு
ராணியை போலோ பண்ணு.

நஸ்ரப்

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை.



ஒருவேளை நாம இருக்கிறதால தான்...
ஓவரா மழை பெய்யுதோ?

மிதுனன்

வீட்டை சுற்றி தண்ணி தேங்கினால்
டெங்கு உருவாகும்னு சொன்னீங்களே!



இப்ப ஊரை சுற்றி தண்ணி தேங்குதே...
என்ன பண்ண போறீங்க ஆபீசர்..?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தம்

## கல்வி அமைச்சு அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் அமுல்படுத்தப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இடமாற்ற உத்தரவுக்கு அமைய செயற்படுமாறு ஆசிரியர்களுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் பழையபடி அதே பாடசாலைகளில் பணி புரிவதாக முறைப்பாடுகள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், சேவையின் நிமித்தம் காரணமாக சில ஆசிரியர்களை தற்போதுள்ள பாடசாலைகளில் தக்க வைத்துக் கொள்ளுமாறு அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அத்தகைய ஆசிரியர்களுக்கு இந்தத் தீர்மானம் பொருந்தாது எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# மரண அறிவித்தல்

அமரர்.

## புஸ்பநாதன் திருலோகநாயகி



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் செல்வச்சந்நிதி தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பநாதன் திருலோகநாயகி (மாலா) (மணியம் மட உரிமையாளர்) 2023.08.15 அன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற விஸ்வலிங்கம் நாகம்மா அவர்களின் பாசமிகு மகளும் காலம் சென்ற கந்தசாமி-இராசபூபதி ஆகியோரின் பாசமிகு மருமகளும் புஸ்பநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் யோகேஸ்வரன் (ஜேர்மன்) ராஜேஸ்வரி திருலோகநாதன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுலட்சணன், பிரசாந்த், டிலக்சன் (நிசாந்) (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்திகா, ராதிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஹம்ரிதன், தவன்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை தற்காலிக வதிவிடமான செட்டியவூர் தொண்டைமானாறு என்ற முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 2023.08.20 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி-7090)

சுலட்சணன்- 077 604 0087
பிரசாந்- 076 770 9951 , டிலக்சன்- + 491735345123 (ஜேர்மன்)

தகவல்-
குடும்பத்தினர்.

# இராசிபலன்

19.08.2023
ஆவணி 02, சனிக்கிழமை
திருதியை முன்னிரவு 09.05 மணிவரை
உத்தரம் பின்னிரவு 01.22மணிவரை

சுபநேரம் -3.05-04.35 மணிவரை
இராகுகாலம்-09.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம்-
அவிட்டம், சதயம்.

வளவன்

**மேஷம்**
மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான நாள்.

**கடகம்**
கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த விரயங்களும் ஏற்படலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள்.

**மகரம்**
மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், பயணங்கள் கைகூடும்.

**ரிஷபம்**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**விருச்சிகம்**
தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**
நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், நல்லவர் என நினைத்த ஒருவர் உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம்,

**மிதுனம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபவிரயங்கள் கூடும்.

**கன்னி**
பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு**
குடும்ப ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**மீனம்**
நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

சத்தியத்திற்கு மற்றொரு பெயர் மனசாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் குவியலுக்குள் மறைத்து தேக்குமரக் குற்றிகள் கடத்தல்

## ஒருவர் மடக்கிப்பிடிப்பு

(சாவகச்சேரி)

தேங்காய் குவியலுக்குள் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட 13 தேக்க மரக்குற்றிகளை நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மகேந்திரா வாகனத்தினுள் ஒல்லித் தேங்காய் குவியலுக்குள் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட தேக்க மரக் குற்றிகளே சாவகச்சேரி நகர்ப் பகுதியில் விசேட கடமையில் நின்றிருந்த பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின் போது மரக்கடத்தலில் ஈடுபட்ட நபர் தப்பித்துச் சென்றிருந்த நிலையில் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். முல்லைத்தீவைச் சேர்ந்த 33 வயதான சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான தேக்க மரங்களே இவ்வாறு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்ட போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (4-30)



தெல்லிப்பழை துர்க்காதேவியின் வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்- சிவசாந்தன்)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை இயந்திரம் பழுது

## நோயாளர்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் உள்ள சிரி சிமிலேசர் இயந்திரம் கடந்த ஒரு மாத காலமாக பழுதடைந்த நிலையில் இயங்காமல் உள்ளது.

இதனால் சத்திரசிகிச்சைகளுக்கு வரும் புற்று நோயாளர்கள் பாரிய அசௌகரியத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

குறித்த சிரி சிமிலேசர் இயந்திரத்தினை திருத்துவதற்கு பதினெட்டு லட்சம் ரூபா செலவாகும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சை பிரிவில் பழுதடைந்த சிரி சிமிலேசர் இயந்திரத்தை திருத்துவதற்கு உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

குறித்த இயந்திரம் வழமைக்கு திரும்பும் வரை அவசர நோயாளர்களை மட்டக்களப்பு போதனை வைத்தியசாலை மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அனுப்பும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6)

# வலி.வடக்கு பிரதேச சபையினால் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் சேவை மாவட்ட செயலகத்தில் நடத்தப்படவுள்ளது .

அந்த வகையில் எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் உப அலுவலகத்திலும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு வலி. வடக்கு பிரதேச சபையின் மயிலிட்டி உப அலுவலகத்திலும் 28, 29 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு வலி. வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பழை உப அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது என பிரதேச சபை செயலாளர் சு.சுதர்ஜன் அறிவித்துள்ளார். (4-6)

# 101 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்தும் 101 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபை உப தலைவர் க. மகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

### நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

# ஆன்மிக.கலை.விளையாட்டு சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு சங்கானை சிதம்பர நடராஜர் ஆலய நிர்வாகம் மற்றும் யாழ். பல்கலைக்கழக பழைய மாணவர்கள், ஊடகங்கள் மற்றும் ஆன்மிக சிந்தனையுள்ளவர்கள் அனைவரும் இணைந்து மோர் விநியோகம் செய்வதுடன் ஆன்மிக, கலை, விளையாட்டு மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என சிதம்பர நடராஜர் ஆலய தர்மகர்த்தா மு.தியாகராஜா தெரிவித்துள்ளார்.

எனவே ஆன்மிக அமைப்பாளர்கள், பொது அமைப்பாளர்கள் விழா ஏற்பாட்டாளருடன் தொடர்பு கொண்டு நிகழ்வுக்குரிய நாளை தெரிவு செய்த பின் அதனைத் தாங்களே ஊடகங்களூடாக தங்கள் நிகழ்வுகளை மட்டும் மக்களுக்கு தெரிவிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டத்தில் இருக்கும் அனைத்து விளையாட்டுக்களையும் உலகத்தரத்திற்கு எடுத்துச் செல்லும் நிகழ்வும் இடம்பெற இருக்கிறது. இதனைப் பாடசாலை, பல்கலைக்கழக, மற்றும் சமூக நலனில் அக்கறையுள்ள அனைவரும் மேற்படி நிகழ்விற்கு முழு ஆதரவையும் நல்குமாறும் தெரிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 076 142 5768 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (4-6)

# சுகாதார சீர்கேடான உணவகங்களுக்கு தண்டம்

## சுகாதார பரிசோதகர்கள் அதிரடி நடவடிக்கை

(கரணவாய்)

நெல்லியடி மற்றும் கரணவாய் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் சுகாதார முறைப்படி இயங்காத உணவகங்களுக்கு தண்டப் பணம் அறவிடப்பட்டதோடு சீர் செய்யப்பட்ட பின்னரே உணவகங்களை திறப்பதற்கு அனுமதி வழங்குமாறும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் கடந்த புதன்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பொதுச் சுகாதார பிரிவில் 3 உணவகங்களுக்கும் கரணவாய் பொதுச் சுகாதார பிரிவில் ஒரு உணவத்திற்குமே குற்றப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நெல்லியடி மற்றும் கரணவாய் பொதுச் சுகாதார பிரிவிற்குட்பட்ட உணவகங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

அதன்போது உணவை கையாளுபவர்கள் ஏப்ரன் தொப்பி இல்லாமலும் உணவகம் ஒன்றின் சுவர் அழுக்கான முறையில் காணப்பட்டமை, கழிவு நீர் குழி வெடித்துக் காணப்பட்டமை, குளிர்சாதனப் பெட்டிக்குள் சமைத்த மற்றும் சமைக்காத உணவுகளை சேர்த்து வைத்தமை போன்றன கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது ஏப்பிரன் தொப்பி இல்லாமல் உணவு கையாண்டவர்களுக்கு தலா 6ஆயிரம் ரூபாவும் சுவர் அழுக்கான உணவகத்துக்கு 12 ஆயிரம் ரூபாவும் திண்மக் கழிவை ஒழுங்கான முறையில் அகற்றாமை உட்பட 3 குற்றங்களுக்காக 12 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் அறவிடப்பட்டு பருத்தித்துறை நீதி மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது. (பி-ஐ)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

உ.இ.ம மகாராஜா ஸ்ரீராஜசேகரா பதிப்பித்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி செகராசசேகரனின் கைலாய அந்தாதி நூல் வெளியீட்டு நிகழ்வு வடமாகாண கூட்டுறவு ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் ஏ.சின்னத்தம்பி தலைமையில் வலி.மேற்கு பிரதேச சபை சங்கானை நூல் நிலைய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (4)



வேலணை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வு நேற்று பிரதேச செயலரும் பிரதேசத்தின் பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான கை.சிவகரன் தலைமையில் வேலணை மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. (படங்கள்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5 வருடகால விடுமுறையில்

# 5000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றம்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

(கொழும்பு)

சுமார் 5,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உரிய அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கல்வி முறையில் 40,000இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச ஊழியர்கள் 5 வருட காலம் விடுமுறை பெற்று உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வேலைக்குச் செல்லலாம் என அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்ததாகவும் அதனைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூளையில்லா அரசாங்கத்தினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்



கள் கிடைப்பது பிரச்சினை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

### ஓய்வுபெற்ற விசேட வைத்தியர்கள்

# மீள சேவைக்கு திரும்பினால் சகல வசதிகளும் வழங்கப்படும்

## — சுகாதார அமைச்சு தீர்மானம் —

(கொழும்பு)

ஓய்வு பெற்ற விஷேட வைத்தியர்கள் மீண்டும் சேவைக்கு திரும்புவார்களாயின் அவர்களுக்கு அவசியமான சகல வசதிகளையும் வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தூரப் பிரதேசங்களில் பணியாற்றும் வைத்தியர்களுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வைத்தியசாலைகளிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலம் இல்லாத இடங்களில் வாடகை அடிப்படையிலேனும் வைத்தியர்களுக்கான வாசஸ்தலங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

அதேநேரம், இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் நாட்டின் வைத்தியசாலைகளில் பணியாற்றவுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானது என்றும் அவ்வாறான எந்தவித தீர்மானமும் எட்டப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# 3 நாட்களேயான சிசுவை கைவிட்டுச் சென்ற தாய்

## சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

பிறந்து 3 நாட்களேயான குழந்தையை கைவிட்டுச் சென்ற சந்தேகத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிராந்துருகோட்டே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று நாட்களேயான குழ ந்தையை பெற்றெடுத்த தாய் ஒருவர், குழந்தையை மஹியங்கனை போதனா வைத்திய சாலைக்கு பின்னால் கைவிட்டுச் சென்ற சந்தேகத்தில் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று நாட்களேயான அந்த குழந்தை, மஹியங்களை வைத் தியசாலையின் விசேட குழந்தைகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# சோளத்தின் வரி குறைப்பு



(கொழும்பு)

சோளத்திற்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரி அதிரடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி சோளத்திற்கு விதிக்கப்பட்ட இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு 75 ரூபாவிலிருந்து 25 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி)

### இதய குழாய் சிகிச்சைப் பிரிவில்

# மருத்துவர்கள் இல்லாமையால் உயிராபத்தில் நோயாளர்கள்

(கொழும்பு)

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான இதய குழாய் சிகிச்சைப் பிரிவுக்கு விசேட வைத்தியர் இல்லாத காரணத்தினால் நோயாளிகள் ஆபத்து நிலையில் உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நேரத்தில் பரிசோதனைகளை மேற்கொள்ளாததால் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய அபாய நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் கரப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகள், கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கராப்பிட்டிய போர்தனா வைத்தியசாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், சிறுவர் இருதய குழாய் சிகிச்சை பிரிவில் இருந்த இரு வைத்தியர்களில் ஒருவர் நாட்டை விட்டு வெளிநாடு சென்றுள்ள நிலையில் மற்றைய வைத்தியர் தற்போது பயிற்சிக்காக சென்றுள்ளார் என தெரிவித்தார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 380 | 400 |
| தக்காளி | 200 | 250 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 200 | 200 |
| கோவா | 280 | 220 | 280 | 300 |
| கரட் | 400 | 500 | 500 | 500 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 100 | 120 | 160 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 170 | 150 | 180 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 80 | 80 | 80 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 120 | 160 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 300 | 250 |
| போஞ்சி | 420 | 480 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 160 | 180 | --- | 180 |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 120 |


திருமறைக் கலாமன்றம்

எமது கலைத்தூது அழகியல் கல்லூரியின் மாணவி

செல்வி

நியோமி வெலிஜியா வில்சன்

அவர்களின்

பரத நடன அரங்கேற்றம்

காலம்– இன்று (19.08.2023) சனிக்கிழமை

நேரம்: பி.ப 2.30 மணி

இடம்– வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

செல்வி.நியோமி வெலிஜியா வில்சன் அவர்கள் நடனக்கலையை ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் அவர்களிடம் கற்று அரங்கேறுகிறார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.





இன்று பரத நடன அரங்கேற்றத்தை மேற்கொள்ளும் செல்வி நியோமி வெலிஜியா வில்சன் அவர்களை வாழ்த்தி நிற்பதுடன், இவரது வளர்ச்சிக்கு காரணமான பெற்றோர், உறவினர்களையும், குருஷேஸ்திரமாக நின்று பயிற்றுவித்த எமது நடன ஆசிரியை ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

(சி–7092)

இயக்குநர், அங்கத்தவர்கள்– திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 183

### பத்துக்கோடி பரிசு பெற்ற துப்புரவு பணியாளர் பேபிசேச்சி

கேரளாவைச் சேர்ந்த பேபி சேச்சி என்ற துப்புரவு பணியாளருக்கு லாட்டரியில் 10 கோடி ரூபாய் பரிசு விழுந்தது. பரிசு விழுந்த பின்னரும் அவர் இன்னும் அவர் வேலை பார்த்த கல்லூரியில் அதே பணியினைச் செய்து வருகிறார்.

இது பற்றி அந்த பெண், பேட்டி எடுப்பவரிடம் பேசிய உரையாடலை அப்படியே கொடுத்துள்ளோம்.

பேபி சேச்சி நீங்க இந்த வேலையை (துப்புரவு வேலை) விட்டுட்டதாக சொன்னார்களே உண்மையா?

"யார் சொன்னது ? நான் எதுவும் இல்லாத நிலையில் இருக்கும் போது எனக்கு இந்தக் கல்லூரியும் நகராட்சியும் தான் ஆதரவாக இருந்தது. இப்போதும் ஆதரவாக இருக்கிறது. எத்தனை இலட்சங்கள் கிடைத்தாலும் இதெல்லாம் மறக்க முடியாது. இந்த வேலையை நான் பெருமையாக நினைக்கிறேன். அதனால்தான் இந்த வேலையை மீண்டும் தொடர்கிறேன்."

பேச்சுக்கிடையில், பேபி சேச்சியின் கண்கள் கண்ணீரால் நிரம்பியது. "மகனுக்கு மூன்று வயது இருக்கும் போது என் கணவர் இறந்து விட்டார். அப்போது எனக்கு பதினெட்டு வயது. அதன் பிறகு, வாழ்க்கை சிரமத்துடன் தனிமையில் கழிந்தது. வாழ்க்கைப் பயணம் இருள் சூழ்ந்ததாக இருந்தது. யாருடைய துணையும் இல்லாமல் மகனை கஷ்டப்பட்டு வளர்த்துஆளாக்கினேன்.

கிடைத்த எல்லா வேலைகளையும் செய்தேன். இப்போது மகன் அவனது மனைவி, குழந்தை என குடும்ப உறுப்பினர்களாக ஐந்து பேர் இருக்கிறோம். மழை வரும் போது வீட்டின் மேற்கூரை ஒழுகும். வீடு தாழ்ந்த பகுதியில் இருப்பதால் வீட்டிற்குள்ளேயும் மழை வெள்ளம் வரும்.

லாட்டரியில் கிடைத்த இந்தப் பணத்தைக் கொண்டு முதலில் மழைத் தண்ணீர் வீட்டிற்குள் வராத அளவிற்கு உயர்த்தி புதியதாக வீடு கட்ட வேண்டும். இது தான் என்னுடைய முதல் விருப்பமாக உள்ளது."

பேபி சேச்சியிடம் நான் கண்ட பெருந்தன்மை இதுவல்ல. அதையும் அவரே தொடர்ந்தார். "லாட்டரி விற்பவர் வந்த போது நானும் என்னுடைய ஒரு உறவினர் மட்டுமே இருந்தோம். லாட்டரி சீட்டுக்கான 25 ரூபாய் என்னிடம் இருந்தது. என் உறவினரிடம் அதுவும் இல்லை. அவருக்கும் சேர்த்து நான் பணம் கொடுத்தேன். மற்றவர்கள் எல்லாம் வேறு பகுதியில் இருந்தனர்.

அவர்கள் ஒன்பது பேரையும் அழைத்து எல்லோரும் சேர்ந்து 250 ரூபாய் ஒன்று சேர்த்து லாட்டரி சீட்டு வாங்கினோம். லாட்டரி சீட்டின் முடிவு வந்த போது என்னால் நம்பவே முடியவில்லை. பிறகு உண்மை தெரிந்தவுடன் என்னால் கண்ணீரை அடக்க முடியவில்லை."

உங்கள் உறவினருக்கும் நீங்கள் தானே பணம் கொடுத்தீர்கள் பரிசு விழுந்தவுடன் அவர் மீது பொறாமை ஏதும் தோன்றியதா? எனக் கேட்ட போது

ஓ போதும் நான் அப்படி பொறாமை கொள்ளவில்லை. காரணம் டீ குடிக்க பணம் குறைவாக இருந்தால் அந்த டீயை பங்கிட்டுக் கொள்வோம். பலகாரம் வாங்கப் பணம் ஏதும் குறைவாக இருந்தாலும் அந்தப் பலகாரத்தையும் பங்கிட்டுக் கொள்வோம். கொடுப்பதற்கு எங்கள் இருவரிடமும் ஏதும் இல்லை என்பது தான் காரணமாக இருந்தது.

பணத்திற்கு கஷ்டமான சூழ்நிலைகளில் இருவரும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து உதவி செய்து வாழ்ந்தவர்கள் நாங்கள். லாட்டரி விற்பவர் வந்த போது என்னிடம் காசு இருந்தது. அவளிடம் இல்லை. அதுதான் அவளுக்கும் சேர்த்து நானே லாட்டரி எடுத்தேன். பரிசு விழுந்தால் பழசெல்லாம் மறக்கிறவர்கள் இருக்கலாம்.

பணத்தைக் கண்டால் உறவுகளை முறிப்பவர்கள் இருக்கலாம். ஆனால் என்னால் அது முடியாது. நான் கஷ்டமான சூழ்நிலையில்வாழ்ந்த போது எனக்கு கைத்தாங்களாக இருந்தது அவள் தான்."

பேபி சேச்சிக்கு கல்வியறிவு குறைவு தான். இருந்த போதும் அவருடைய பரந்த மனப்பான்மை மனிதர்களுக்கு பாடமாக இருக்கிறது. ஆம் மனிதன் மனிதனை உணர்ந்து கொள்ளும் பாடம்.



Raagavi Raaga
1 mutual friend

# பெண்ணின் வயிற்றில் கத்தரிக்கோலை வைத்து சிகிச்சை செய்த மருத்துவர்கள்

## ஆந்திராவில் அதிர்ச்சி சம்பவம்



(டில்லி)

ஆந்திராவில் அறுவை சிகிச்சையின் போது பெண்ணின் வயிற்றுக்குள் மருத்துவர்கள் கத்தரிக்கோலை வைத்து தைத்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம் ஏலூர் அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

குழந்தை பிறந்து வீடு திரும்பிய அந்தப் பெண் கடந்த நான்கு மாதங்களாக வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இதையடுத்து மருத்துவர்கள் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த போது வயிற்றில் கத்தரிக்கோலை வைத்து தைத்ததை கண்டறிந்தனர். இதனை வெளியே தெரியாமல் மறைக்க மருத்துவர்கள் திட்டமிட்டதாக தெரிகிறது.

ஆனால் எக்ஸ்ரேயை மருத்துவமனை ஊழியர்கள் சிலர் சமூக ஊடகங்களில் வெளியிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் விஜயவாடா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், வயிற்றில் கத்தரிக்கோல் வைத்து தைத்த சம்பவத்திற்கு காரணமான அனைவரும் பணியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று மருத்துவமனை கண்காணிப்பாளர் அதிரடியாக தெரிவித்துள்ளார். (நி-5)

# கனடாவை நெருங்கும் காட்டுத்தீ நகரத்திலிருந்து மக்கள் வெளியேற்றம்

(ஒட்டாவா)

மிகவேகமாக பரவிவரும் காட்டுத்தீ குறித்த அச்சம் காரணமாக கனடாவின் தொலைதூர வடக்கில் உள்ள மிகப் பெரிய நகரமொன்றிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

20,000 பேர் வசிக்கும் யெலோனைவ் என்ற நகரத்தை வார இறுதியில் காட்டுத்தீ நெருங்கக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

புதன்கிழமை காட்டுதீ நகரத்திலிருந்து 11 கிலோமீற்றர் தொலைவில்காணப்பட்டது.

இதேவேளை ஹேய்ரிவர் பகுதியில் உள்ள சமூகத்தையும் காட்டுதீ பாதிக்கின்றது.

நகரிலிருந்து தப்பிய வேளை எங்கள் கார் உருகத் தொடங்கியது என தப்பிய ஒருவர் தெரிவித்துள்ளார்.

200 காட்டுதீக்களுக்கு எதிரான போராட்டம் காரணமாக நோர்த் வெஸ்ட் டெரிட் டெரிசில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

காட்டுதீக்கள் ஆபத்தானவையாக மாறியுள்ளன. தற்போது யெலோன் நைவ் ஆபத்திற்குள் சிக்குண்டுள்ளது என அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உடனடி ஆபத்தில்லை. ஆனால் மழை பெய்யாவிட்டால் வாரஇறுதிக்குள் காட்டுதீ நகரத்தை நெருங்கிவிடும். இதன் காரணமாக நகரத்தில் தங்கியிருக்க நினைத்தால் உங்களை நீங்களே ஆபத்துக்குள் சிக்க வைக்கின்றீர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# பாகிஸ்தானில் பொறுப்பேற்றது இடைக்கால அமைச்சரவை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் அன்வாருல் ஹக் காக்கர் தலைமையிலான இடைக்கால அமைச்சரவை பொறுப்பேற்றுள்ளது.

பாகிஸ்தானின் மத்திய வங்கி முன்னாள் தலைவர் ஷம்ஷட் அக்தார் நிதியமைச்சராகவும் அமெரிக்காவுக்கான முன்னாள் தூதர் ஜலில் அப்பாஸ் ஜிலானி வெளியுறவு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்துறை, தகவல், மனித உரிமை உள்ளிட்ட துறைகளுக்கான அமைச்சர்களையும் பிரதமர் காக்கர் நியமித்துள்ளார்.

அன்வாருல் ஹக்காக்கர் இந்த வாரம் தான் பாகிஸ்தான் பிரதமராகப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இடைக்கால அரசாங்கம் தேர்தல் நடைமுறைகளை மேற்பார்வையிடும்.

அத்துடன் புதிய தொகுதிகள் குறித்து டிசெம்பர் நடுப்பகுதியில்தான் உறுதி செய்ய முடியும் என்றும் அதன் பிறகே வாக்களிப்பு நாள் குறித்து அறிவிக்கப்படும் என்றும் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டைக்கு இழுத்தால்

# அணு ஆயுதங்களை பயன்படுத்த

# ஒருபோதும் தயங்கமாட்டேன்!

## எச்சரிக்கை விடுக்கும் பெலாரஸ்

(மினஸ்கில்)

**பெலாரஸினை வலுச்சண்டைக்கு இழுத்தால் ரஷ்யா வழங்கிய அணு வாயுதங்களை பயன்படுத்துவோம் என அந்த நாட்டின் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகசென்கோ மீண்டும் தெரிவித்துள்ளார்.**

பெலாரஸிற்கும் அதன் எல்லையில் உள்ள நேட்டோ நாடுகளுக்கும் இடையில் பதற்றநிலை அதிகரித்துள்ள நிலையிலேயே பெலாரஸ் ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உக்ரைன் தனது எல்லைகளை கடந்தால் தவிர உக்ரைன் ரஷ்ய யுத்தத்தில் பெலாரஸ் ஒருபோதும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாங்கள் ரஷ்யாவிற்கு உதவுகின்றோம். அவர்கள் எங்கள் சகாக்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெலாரஸின் எல்லையிலுள்ள நேட்டோ நாடுகள் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பெலரஸ் எங்களிடம் உள்ள அணுவாயுதங்கள் உட்பட அனைத்தையும் பயன்படுத்தி பதிலடி கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்களிற்கு எதிராக தாக்குதல் இடம்பெற்றால் நாங்கள் பொறுமையாகயிருக்கப் போவதில்லை என தெரிவித்துள்ள பெலரஸ் ஜனாதிபதி எங்கள் மீதான தாக்குதலை தடுப்பதற்காக எங்களிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்துவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் எவரையும் அச்சுறுத்துவதற்காக அணுவாயுதங்களை ரஷ்யாவிலிருந்து கொண்டு வரவில்லை. அணுவாயுதங்கள் வலுவான தற்பாதுகாப்பாக விளங்குகின்றன.

இவை மூலோபாய அணுவாயுதங்கள் இல்லை. அதன் காரணமாக நாங்கள் அவற்றை உடனடியாக பயன்படுத்துவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



ஜூன் மாதம் ரஷ்யா பெலாரஸிற்கு அணுவாயுதங்களை வழங்கியிருந்தது என ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்திருந்தார். (நி-5)

## அமெரிக்கா-சீனா இடையே விமான சேவைகள் நீடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்கா - சீனா நாடுகளுக்கிடையே விமான சேவை நீடிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா-சீனா நாடுகளுக்கிடையே முன்னர் பல விமானங்கள் இயக்கப்பட்டு வந்தன. ஆனால் கொரோனா காலகட்டத்தில் அதன் தேவை குறைந்ததால் பல விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

இவ்வாறான நிலையில், தற்போது இயல்பு நிலை திரும்பி உள்ளதால் இரு நாடுகளுக்கு இடையேயான விமானத்தின் தேவை அதிகரித்து வருகிறது.

எனவே விமான சேவைகளின் அட்டவணையை விரிவுபடுத்துவதாக அமெரிக்க டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனம் கூறியது.

இதன்படி, ஷாங்காய் சர்வதேச விமான நிலையத்துக்கு அமெரிக்காவின் சியாட்டில் நகரில் இருந்து தினமும் டெட்ராய்டு விமான நிலையத்தில் இருந்து வாரத்துக்கு 3 முறையும் விமானங்கள் இயக்கப்பட உள்ளன.

மேலும் 2020 இல் ரத்து செய்யப்பட்ட லாஸ் ஏஞ்சல்ஸ் - ஷாங்காய் விமான சேவை மீண்டும் வாரத்துக்கு 4 முறை இயக்கப்படும் என டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## நெடுஞ்சாலையில் நொருங்கிய விமானம் 10 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

### மலேசியாவில் துயரம்



(கோலாலம்பூர்)

மலேசியாவில் சிறிய ரக விமானம் ஒன்று நெடுஞ்சாலையில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மலேசியாவில் வடக்கு ரிசார்ட் தீவான லங்காவியில் இருந்து நேற்று முன்தினம் மாலை புறப்பட்ட ஒரு சிறிய ரக விமானம் தலைநகர் கோலாலம்பூருக்கு மேற்கே உள்ள சுல்தான் அப்துல் அஜீஸ் ஷா விமான நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது.

அப்போது திடீரென கட்டுப்பாட்டை இழந்த அந்த விமானம் நெடுஞ்சாலையில் விழுந்து நொறுங்கியது. விழுந்த வேகத்தில் விமானம் வெடித்து தீப்பிடித்து எரிந்தது. அதனால் அப்பகுதியே கரும் புகை மண்டலமாக மாறியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த ஆறு பயணிகள், இரண்டு விமான ஊழியர்கள் என அதிலிருந்த 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விமானம் சாலையில் விழுந்ததால் அவ்வழியாகச் சென்ற இரு வாகன ஓட்டிகள் அதில் சிக்கி உயிரிழந்துள்ளனர். காரில் இருந்த ஒருவரும், மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரும் இந்த விமான விபத்தில் உயிரிழந்துள்ளனர். இந்த விமான விபத்து மலேசியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2023 - 17.09.2023

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## உங்களின் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்!



**உழைப்பின் மூலமாக உயர்வை எட்டும் மேஷ இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் பூர்வ புண்ணிய ஸ்தானத்தைப் பார்க்கிறார். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் 5 கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்கின்றன. கூட்டுக் கிரக யோகம்இருப்பதோடு, "புத ஆதித்ய யோகம்", "சந்திர மங்கல யோகம்", "புதசுக்ர யோகம்", "குரு மங்கல யோகம்" ஆகிய யோகங்களும் இருப்பதால், உங்களின் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**கடக - சுக்கிரன்**

ஆவணி மாதம் 1 ஆம் திகதி முதல், கடக இராசிக்கு சுக்கிரன் வக்கிரமாகி செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடத்திற்கு அதிபதி சுக்கிரன் என்பதால், அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. புதிய முயற்சிகளில் ஒன்றிரண்டு தாமதப்படும். அதிக ஆதாயம் கிடைக்கும் என்று நினைத்த தொழிலில், ஆதாயம் குறைவாகவே கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். கோபத்தால் சில நல்ல வாய்ப்புகளை இழப்பீர்கள்.

**கன்னி - செவ்வாய்**

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். "கன்னி செவ்வாய் கடலும் வற்றும்" என்பது பழமொழி. உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதன் செவ்வாய் 6 ஆம் இடத்திற்கு வருகிறார். 8 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய், 6 ஆம் இடத்திற்கு வருவது ஒரு வகையில் நன்மைதான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கேற்ப, சில நல்ல காரியங்களும் இப்பொழுது நடைபெறும். ஆதாயம் தரும் விதத்தில் பயணங்கள் அமையும். ஒரு சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

**மகர - சனி**

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, வக்கிர இயக்கத்தில் மகர இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி, இதுவரை லாப ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரித்தார். இனித் தொழில் ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று




சஞ்சரிக்கப் போகிறார். எனவே தொழிலில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் உங்களிடமே திரும்பிவரும். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு திருப்தி தராது. வியாபாரப் போட்டிகளை சமாளிக்க புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

சிம்மத்தில் வக்கிர நிலையில் சஞ்சரிக்கும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், வக்கிர நிவர்த்தியாவதால் உடன் பிறப்புகளின் வழியில் சுமுகமான பேச்சுவார்த்தை உருவாகும். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், மீண்டும் பணியில் சேர்வதற்கான வாய்ப்புகள் அமையும். பொருளாதாரத்தில் இருந்த பற்றாக் குறை அகலும். வராத பாக்கிகள் வசூலாகும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ், கீர்த்தி மேலோங்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு, போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், எதிலும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்தாலும் உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. மாணவ - மாணவிகளுக்கு மறதி அதிகரிக்கும் காலம் என்பதால் கவனம் தேவை. பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை குறையாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள்.

## வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு!



**சமூக சேவையில் ஆர்வம் காட்டும் ரிஷப இராசி வாசகர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சுக்கிரன் கூட்டுக்கிரக யோக அமைப்பில் சஞ்சரிக்கிறார். சுக ஸ்தானத்தில் 5 கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்கின்றன. அதோடு, "சுக்கிர மங்கல யோகம்" "புத சுக்கிர யோகம்", "புத ஆதித்ய யோகம்" போன்ற யோகங்களும் இருப்பதால் தடைகள் தானாக விலகும்.

**கடக - சுக்கிரன்**

ஆவணி 1 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் அவர் வக்கிரம் பெறுவது ஒரு வகையில் நன்மைதான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கு ஏற்ப எதிர்பாராத திருப்பங்களைச் சந்திக்க நேரிடும். சகோதர வழியில் இருந்த பிரச்சினைகள் அகன்று மன மகிழ்ச்சியை வழங்கும். உத்தியோகத்தில் பணி நீடிப்பும் கூடுதல் பொறுப்புகளும் வருவதற்கான அறிகுறி தென்படும்.

**கன்னி - செவ்வாய்**

ஆவணி 2 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் 5 ஆம் இடத்திற்கு வருவதால் பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். அவற்றை சுப விரயங்களாக மாற்றிக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். வேலை வாய்ப்பிற்கான முயற்சிகளைச் செய்தல், கல்யாணக் கனவுகளை நனவாக்குதல் போன்ற சுப காரியங்களில் கவனம் செலுத்தலாம். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு.

**மகர - சனி**

சனி பகவான் ஆவணி 7 ஆம் திகதி, மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கு சுமார் 4 மாத காலம் சஞ்சரித்த பின்னர் மீண்டும் கும்ப இராசிக்கு செல்லப் போகிறார். வாக்கிய கணித ரீதியாக வரும் இந்த மாற்றம் உங்கள் வளர்ச்சியில் திடீர் முன்னேற்றங்களை ஏற்படுத்தப் போகிறது.




முன்பு மகரத்தில் சஞ்சரித்த பொழுது கொடுக்காத சில பலன்களை சனி பகவான் இப்பொழுது வழங்குவார். குறிப்பாக அண்ணன், தம்பிகளுக்குள் ஏற்பட்ட மனவருத்தங்கள் மாறும். தந்தை வழி ஆதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். சிந்தனைகள் வெற்றி பெற செல்வந்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உங்கள் சந்ததிகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

சிம்மத்தில் வக்கிரமாக சஞ்சரித்து வரும் புதன், ஆவணி 15 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன - பஞ்சமாதிபதியான புதன் பலம் பெறுவது யோகம்தான். பொருளாதாரத்தில் உச்ச நிலை அமையும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு லாபம் வந்து சேரும் நேரம் இது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பணி நீடிப்பும் கூடுதல் பொறுப்புகளும் உண்டு. கலைஞர்களுக்கு கௌரவம், அந்தஸ்து உயரும். மாணவ- மாணவிகளுக்கு கல்வியில் தேர்ச்சியும் நல்ல பெயரும் கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகள், குப்பைகளுக்கு தேவையின்றி தீ மூட்டாதீர்

## கிளிநொச்சி பொலிஸார் அறிவுறுத்து

(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காடுகள், குப்பைகளுக்கு தேவையின்றி தீ மூட்ட வேண்டாம் என கிளிநொச்சி பொலிஸாரினால் அறிவுறுத்தல்கள் வழுங்கப்பட்டு வருகின்றன.**



தற்போது வீசுகின்ற கடுமையான காற்று, கடும் வரட்சி காரணமாக தீப்பரம்பல் வேகமாக ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் தேவையற்ற விதத்தில் தீப்பரம்பல் ஏற்படக் கூடிய வகையில் செயற்பட வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மாவட்டத்தில் எந்த இடத்திலும் தீப்பரவல் ஏற்படாமல் மக்களை விழிப்புடன் செயற்படுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-350)

# மல்லாவிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு



(கண்டாவளை)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மல்லாவிப் பகுதியில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு இடம்பெற்றது.

இதன்போது பொலிஸார், பிரதேச செயலகத்தினர் மற்றும் பிரதேச சபையினர் ஒன்றிணைந்து மல்லாவி நகரில் அமைந்துள்ள வீடுகள், அரச நிறுவனாங்கள், தனியார் நிறுவனாங்கள், பாடசாலைகள், சமயஸ்தலங்கள், பொதுஇடங்கள் தொழிற்சாலைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டதுடன் நுளம்பு பெருகக் கூடிய சூழல்களை வைத்திருந்தவர்களிற்கு அறிவுரைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டதுடன் உடனடியாக சீர் செய்யவும் பணிக்கப்பட்டனர். (4-6-315)

# வறட்சி காரணமாக மீன்கள் குளங்களில் இறக்கவில்லை

## நீர் உயிரின வளர்ப்பு உத்தியோகத்தர் விளக்கம்

(கிளிநொச்சி)

தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக எந்த ஒரு குளத்திலும் மீன்கள் இறக்கவில்லை என நீர் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் சங்கீதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள நீரியல் வள திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக எந்த ஒரு குளத்திலும் மீன்கள் இறக்கவில்லை. அண்மையில் மல்லாவி குளத்தில் விடப்பட்ட மீன் குஞ்சுகள் இறந்ததாக பேசப்பட்ட செய்தி முற்றிலும் பொய்யானது.

மல்லாவி குளத்தில் மீன் குஞ்சுகள் இதுவரையில் விடப்படவில்லை. அக்குளத்தில் உள்ள வேறு சில மீன் இனாங்கள் கால்வாயின் ஊடாக வெளியேறி இறந்துள்ளது. எந்த ஒரு குளத்திலும் நன்னீர் மீன்களுக்கான நோய்கள் ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மற்றும் வியாபாரிகள் அனைவரும் மீனவ சங்கத்தின் ஊடாக பதிவு செய்திருத்தல் வேண்டும். அப்படி இதுவரை காலமும் பதிவு செய்யாதவர்கள் உடனடியாக நன்னீர் மீனவர் சங்கத்தில் தமது பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு தமது பகுதிகளில் உள்ள குளங்களில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெறுவதினை கண்டால் உடனடியாக நீரியல் திணைக்களத்தினருக்கு தெரிவிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.(4-6)

# மனிதப்புதைகுழி வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையில் கலந்து கொண்ட சட்டத்தரணி வி.கே. நிறஞ்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எதிர்பார்த்ததைப் போன்று 21 ஆம் திகதி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி ஆரம்பமாக இருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அதற்கான நிதி இதுவரை கிடைக்கப் பெறாத நிலையில் உடனடியாக அந்த அகழ்வுப் பணி மேற்கொள்ளமுடியாத நிலை இருப்பதாக சட்டவைத்திய அதிகாரி வாசுதேவாவினால் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அத்தோடு, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் தங்களுடைய பாதீடுகளை தாக்கல் செய்து அவர்கள் இந்த அகழ்வுப் பணியில் ஈடுபட முடியுமென தெரிவித்தார்.

அதேநேரம் பேராசிரியர் புஸ்பரட்ணம் இந்த அகழ்வுப் பணியில் ஈடுபடுவதற்கு தனது சம்மதத்தை தெரிவித்திருந்தார்.

எனினும் நிதி கிடைக்கப் பெறாத நிலையில் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட முடியாமல் இருக்கின்றது.

இதனால் வழக்கு மீண்டும் இம்மாதம் 31 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு நீதிமன்றில் பிரசன்னமாகியிருக்காத பிரதேச செயலாளர், பிரதேச சபை, முல்லைத்தீவு மாவட்ட செயலக அலுவலகர், மின்சார சபை போன்றவர்களை அடுத்த தவணை கட்டாயம் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்து இந்த அகழ்வுப் பணியை மேற்கொள்வதற்கான தீர்மானங்களை எடுப்பதற்கு ஆவண செய்யுமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது என தெரிவித்தார். (நி-4-6)



யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் வாகன பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இப்பாடசாலையின் 200 ஆவது ஆண்டு விழா இன்றும் நாளையும் நடைபெற உள்ள நிலையில் இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் இப்பேரணி நடைபெற்றது.

## கடும் வறட்சி

# கால்நடை வளர்ப்பாளர்கள், நன்னீர் மீனவர்கள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியாவில் நிலவும் வறட்சியினால் நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களும் நீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பரநெட்டுகல் குளத்தில் அதிகளவானோர் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குளத்தில் தற்போது நீர் வற்றியுள்ளமையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஓமந்தைக் குளம், நாவற்குளத்திலும் நீர் வற்றியுள்ளமையால் கால்நடை வளர்ப்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலபோகத்திற்கான மழை பெய்யாமையால் குளங்களில் உள்ள நீர் வற்றி வறண்ட நிலையில் உள்ளதால் கால்நடைகளுக்கான நீர் தட்டுப்பாடாக உள்ளது.

இதனால் கால்நடை வளர்ப்பையே நம்பியுள்ள தமது வாழ்வாதாரம் தற்போது கேள்விக்குறிக்குள்ளாகியுள்ளது எனவும் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-6)

## காங்கேசன்துறை

# உயர் பாதுகாப்பு வலயங்களில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(அராலி)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாகவும் பொலிஸார் திருட்டுக்களை கட்டுப்படுத்த தவறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த 33 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும் குறித்த பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.

அதனால் காணி உரிமையாளர்கள் அப்பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது. அந்நிலையில் அப்பகுதிக்குள் ஊடுருவும் இரும்பு திருடர்கள் வீடுகளில் உள்ள இரும்புகளை திருடி செல்கின்றனர்.

எனவே இதனைத் தடுக்க உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

260





அந்தப் படகில் ஓர் இளம் பெண் இருந்தாள். அவளைப் பார்த்ததும் சேந்தன் அமுதன் தன் மாமன் மகளைக் குறித்து வர்ணனை செய்தது நமக்கு நினைவு வருகிறது. ஆம் அவள் பூங்குழலியர்கத்தான் இருக்க வேண்டும். பெயருக்குத் தகுந்தாற் போல் இவள் கூந்தலில் ஒரு தாழம் பூவின் இதழ் அழகு பெற்றுத் திகழ்ந்தது. நீண்ட கரிய கூந்தல் சுருண்டு சுருண்டு விழுந்து அவளுடைய கடைந்தெடுத்த தோள்களை அலங்கரித்தன. கடல் அலைகள் கரையில் ஒதுக்கும் சங்குகள், சிப்பிகள் முதலிய வற்றை ஆரமாக்கி அவள் அணிந்து கொண்டிருந்தாள். ஆனால் இவையெல்லாம் அவளுடைய மேனியில் பட்டதனால் தாங்களும் அழகு பெற்றனவேயன்றி, அவளை அலங்கரித்ததாகச் சொல்ல முடியாது. அழகே ஒரு வடிவம் தாங்கி வந்தால், அதற்கு எந்த ஆபரணத்தைக் கொண்டு அழகு செய்ய முடியும்?

பூங்குழலி படகில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு பாடினாள். அவளுடைய கானத்தைக் கேட்பதற்காகவே கடலும் அலை அடங்கி ஒய்ந்திருந்தது போலும்! அதற்காகவே காற்றும் வீசி அடிக்காமல் மெள்ள மெள்ளத் தவழ்ந்து வந்தது போலும்! தூரத்தில் தெரிந்த காட்டு மரங்களும் இலை அசையாமல் நின்று அவளுடைய கானத்தைக் கவனமாகக் கேட்டன போலும்! வானமும், பூமியும் அந்தக் கானத்தைக் கேட்டு மதிமயங்கி அசைவற்று நின்றன போலும்! கதிரவன் கூட அந்தக் கானத்தை முன்னிட்டே மூலைக் கடலை அடைந்து முழுகி மறையாமல் தயங்கி நிற்கின்றான் போலும்.

தேனில் குழைத்து, வானில் மிதந்து வந்த அப்பாடலைச் சற்றுச் செவி கொடுத்துச் கேட்கலாம்.

“அலைகடலும் ஓய்ந்திருக்க அகக் கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகந்தான் பதைப்பதுமேன்?
காட்டினில் வாழ் பறவைகளும் கூடுகளைத் தேடினவே!
வேட்டுவரும் வில்லியரும் வீடு நோக்கி ஏகுவரே
வானகமும் நானிலமும் மோனமதில் ஆழ்ந்திருக்க
மான்விழியாள் பெண்ணொருத்தி மனத்தில் புயல் அடிப்பதுமேன்?
வாரிதியும் அடங்கி நிற்கும் மாருதமும் தவழ்ந்து வரும்
காரிகையாள் உளந்தனிலே காற்றுச் சுழன்றடிப்பதுமேன்?

அந்த இளமங்கையின் உள்ளத்தில் அப்படி என்ன சோகம் குடி கொண்டிருக்குமோ, தெரியாது! அவளுடைய தீங்குரலில் அப்படி என்ன இன்ப வேதனை கலந்திருக்குமோ, தெரியாது! அல்லது அப்பாடலில் சொற்களோடு ஒருவேளை கண்ணீரைக் கலந்து தான் பாடலை அமைத்து விட்டார்களோ, அதுவும் நாம் அறியோம். ஆனால் அந்தப் பாடலை அவள் பாடுவதைக் கேட்கும் போது நமக்கு நெஞ்சம் விம்மி வெடித்து விடுவது போன்ற உணர்ச்சி ஏனோ உண்டாகிறது.

பூங்குழலி கானத்தை நிறுத்தினாள். படகின் துடுப்பை நாலு தடவை வலித்தாள். படகு கரை அருகில் வந்து சேர்ந்தது. பூங்குழலி படகிலிருந்து துள்ளிக் குதித்துக் கரையில் இறங்கினாள். படகைக் கரையில் இழுத்து போட்டாள். கரையில் சில கட்டு மரங்கள் கும்பலாகக் கிடந்தன. அவற்றின் மீது படகு சாய்ந்து நிற்கும்படி தூக்கி நிறுத்தினாள். சாய்ந்து நின்ற படகில் தானும் சாய்ந்து கொண்டு ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அதோ கலங்கரை விளக்கின் உச்சி மண்டபத்தில் தீ மூட்டியாகி விட்டது. தீ ஜுவாலை விட்டு எரிகிறது. இனி இரவெல்லாம் அந்த ஜோதி எரிந்து கொண்டிருக்கும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பாடாதே செத்தேன்

(நேற்றைய தொடர்ச்சி)



உடனே அவன், ஐயா! நான் திருடன் இல்லை. இவன்தான் திருடன். இவனே விருப்பப்பட்டு இந்தப் பொற்காசுகளை எனக்குத் தந்தான். நான் சொல்வதை நம்புங்கள் என்றான்.

முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவர்க்கு யாராவது இவ்வளவு பொற்காசுகளைத் தருவார்களா? நீ பொய் சொல்கிறாய்.

நீ திருடன் தான். இவனைத் தூக்கில் போடுங்கள் என்று கட்டளை இட்டார் நீதிபதி.

அங்கிருந்த தூக்கு மேடைக்கு அவனை வீரர்கள் இழுத்துச் சென்றனர். அவன் கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்ட ஒரு காவலன் வந்தான்.

நீதிபதி அவர்களே! இறப்பதற்கு முன் என் கடைசி ஆசை. இந்தப் புல்லாங்குழலை நான் சிறிது நேரம் இசைக்க வேண்டும். அனுமதி தாருங்கள் என்று கேட்டான் அவன்.

புல்லாங்குழலை அவனிடம் தருமாறு கட்டளை இட்டார் நீதிபதி.

அங்கிருந்த திருடன். ஐயோ! வேண்டாம். புல்லாங்குழலை அவனிடம் தராதீர்கள். எல்லோருக்கும் ஆபத்து என்று கத்தினான்.

சாகப் போகிறவனின் கடைசி ஆசையை நிறைவேற்ற வேண்டும். அவன் புல்லாங்குழலை இசைப்பதால் என்ன கெடுதி வந்து விடப் போகிறது இசைக்கட்டும் என்றார் நீதிபதி. அப்படியானால் என்னை இந்தத் தூணோடு சேர்த்துக் கட்டி விடுங்கள். பிறகு அனுமதி கொடுங்கள் என்றான் திருடன்.

உடனே திருடன் தூணில் கட்டப்பட்டான். புல்லாங்குழலை அவன் இசைக்கத் தொடங்கினான். இசைக்கு ஏற்ப எல்லோரும் ஆடத் தொடங்கினார்கள். காவலன் கையில் இருந்த தூக்குக் கயிறு நழுவிக் கீழே விழுந்தது.

அவன் இசைப்பதின் வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. எல்லோரும் வேகமாக ஆடினார்கள். தூணில் கட்டப்பட்டு இருந்த திருடனும் கை கால்களை ஆட்டினான்.

பாடுவதை நிறுத்து. உன்னை விடுதலை செய்கிறேன் என்று ஆடிக் கொண்டே கெஞ்சினார் நீதிபதி.

பாடுவதை நிறுத்தினான் அவன். எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

திருடனின் அருகே சென்ற அவன் உண்மையைச் சொல். பொற்காசுகளை நான் உன்னிடம் இருந்து திருடினேனா? அல்லது நீயாக எனக்குத் தந்தாயா? மீண்டும் இசைக்கத் தொடங்குவேன் என்றான்.

கட்டப்பட்டு இருந்ததால் மூச்சுத் திணறிய திருடன் நானாகத்தான் தந்தேன். நான்தான் திருடன். வீணாக இவன் மீது பொய்க் குற்றம் சுமத்தினேன் என்றான்.

உண்மையை அறிந்த நீதிபதி அந்தத் திருடனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்.

எல்லோரையும் வணங்கிய அவன் அங்கிருந்து தன் ஊருக்குப் புறப்பட்டான்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தின் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். – லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதயங்களை ரணமாக்கிய மாணவர்களின் மரணம்

வவுனியா தெற்கு பாடசாலைகளுக்கிடையான வலயமட்ட விளையாட்டு போட்டியில் பங்கேற்றிருந்த இரண்டு மாணவர்கள் நேற்று முன்தினம் (17) நீரில் மூழ்கி மரணமான செய்தி மனிதநேயமுள்ள அனைவரது இதயங்களையும் ரணமாக்கியுள்ளது.

வவுனியா தெற்கு பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட விளையாட்டு போட்டி வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது மைதானத்தில் வெட்டப்பட்டிருந்த நீர் நிறைந்த குழிக்குள் தவறிவிழுந்த இரண்டு மாணவர்கள் நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமடைந்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் மட்டுமன்றி, ஏனைய இடங்களிலும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்போது அந்தப் போட்டிகளில் பங்கேற்கின்ற மாணவர்களின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பும் சம்பந்தப்பட்ட பாடசாலை, சம்பந்தப்பட்ட விளையாட்டுக்குழு என்பவற்றைச் சார்ந்ததாகும்.

தவிர, மைதானத்தின் களநிலை பற்றி ஆராய்ந்த பின்பே அங்கு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது பற்றிய தீர்மானங்களை எடுத்திருக்க வேண்டும்.

குறித்த தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னராக பாதுகாப்பற்ற இடங்களை அடையாளப்படுத்துவது, மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவது, விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்களிடம் அதுபற்றித் தெரிவிப்பது என உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் இந்த ஏற்பாடுகள் எதுவும் நடக்கவில்லை என்பதுபோல நிலைமை அமைந்துவிட்டது.

ஆம், வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கான அனுமதிகளைக் கொடுக்கும்போது, அந்த மைதானத்தின் களநிலைகளைக் கருத்தில் எடுப்பது பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழக மைதானத்தில் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுமாயின், அங்கு குன்று குழிகள் வெட்டப்பட்டிருக்குமாயின் அந்த மைதானத்தை விளையாட்டுப் போட்டிக்கு பயன்படுத்துவதென்பது எந்தவகையிலும் ஏற்புடையதன்று.

இங்கு மைதானப் பயன்பாடு என்பது தனித்து பாடசாலைகளுக்கு மட்டுமல்ல, பல்கல்லக்கழக மாணவர்களுக்கும் அது பயன்படுத்த முடியாத சூழ்நிலையிலேயே இருக்கும்.

எனவே இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். இதைவிடுத்து எழுந்தமானமாக எந்த ஆபத்தும் நடக்காது என்ற நம்பிக்கையில், விளையாட்டுப் போட்டிகளை நடத்தும்போது விபரீதங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

அந்த விபரீதங்கள் ஈடுசெய்யக் கூடியவையாக இருக்கும்போது, அதுபற்றி எவரும் கவனமெடுக்கப் போவதில்லை.

மாறாக, மரணம் சம்பவிக்கின்றபோது, அந்த இழப்பு ஈடு செய்ய முடியாததாகிவிடுகிறது.

வீட்டில் இருந்து பாடசாலைக்குச் சென்ற இரண்டு மாணவர்கள் அதே நாளின் மாலைப் பொழுதில் சடலமாக வீட்டுக்கு வரும்போது அதன் வேதனையை மனிதமொழிகளால் சொல்ல முடியுமா என்ன?

ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வாறான இழப்புகள் நடக்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமானது.

# பாரதப் பிரதமர் மோடியிடமிருந்து ரணில் பாடம் கற்க வேண்டும்

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை முன்னுதாரணமாக் கொண்டு, ஜனாதிபதி செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,"மொட்டுக் கட்சியின் அரசாங்கம் தான் இந்த நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்றது.உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் இன்று பிற்போடப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு பயந்த ஓர் அரசாங்கத்தினால் நாட்டை நிர்வகிக்க முடியுமா? இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து இவர்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். கொரோனா உச்சத்தில் இருந்த காலத்தில், 5 மாநிலங்களுக்கும் அவர் தேர்தலை நடத்தினார். இவற்றில் அவர் தோல்வியடைந்தார்.

பின்னர் கொரோனாவை சரியான முறையில் கட்டுப்படுத்தி, நாட்டை முன்னேற்றிவிட்டு மீண்டும் மாநிலங்களுக்கு தேர்தலை நடத்தினார். இந்தத் தேர்தலில் அவர் வெற்றியும் பெற்றார்.ஒரு அரசியல் தலைவர் என்றால் இப்படித்தான் சவால்களை எதிர் கொள்ள வேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த, எந்த பிரேரணையைக் கொண்டு வந்தாலும் நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற ஆதரவளிப்போம் என்று ஜனாதிபதியிடம் உறுதியளித்திருந்தோம்.

ஜனநாயகம் இல்லாத ஒரு நாட்டுக்கு சர்வதேசம் உதவ முன்வராது. ஐ.எம்எப் எமக்கு உதவி செய்தாலும், ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசாங்கம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை அவர்கள் தீவிரமாக அவதானித்துக்கொண்டுதான் இருப்பார்கள்.

இது அவர்களின் நிபந்தனைகளில் ஒன்றாகவும் இருக்கிறது. எனினும் அரசாங்கம் இந்த நிபந்தனையை மீறித் தான் தற்போது செயற்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 40 வயது குடும்பஸ்த்தர் வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா, புதிய கற்பகபுரம் கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் அவரது வீட்டில் நேற்றுப் பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, புதிய கற்பகபுரம் கிராமத்தை சேர்ந்த 40 வயதுடைய ரூபன் என்பவரே அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வாகனம் திருத்தும் தொழில் புரியும் இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

குறித்த நபரின்மனைவி வெளியில் சென்று திரும்பிய வேளை தன் கணவர் தூக்கில் சடலமாக கிடந்ததை கண்டுள்ளார்.

தொடர்ந்து கிராம மக்கள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, பூவரசங்குளம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## முட்டையின் விலை எதிர்காலத்தில் குறையும்

### அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

எதிர்காலத்தில் முட்டையின் விலையை குறைக்க முடியும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தி குறைந்தமையால்முட்டை விலை உயர்ந்தது, எனினும் படிப்படியாக உற்பத்தி அதிகரித்து வருவதால் முட்டை விலை குறைவடையும் என அமைச்சர் கூறினார்.

அமைச்சர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நெல் கொள்வனவுக்கு சந்தைப்படுத்தல் சபைக்குப் போதியளவு பணம் ஒதுக்கப்படவில்லை. திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதியைக் கொண்டு ஓரளவுக்கு நெல்கொள்வனவை மேற் கொண்டுள்ளோம்.

இருந்தபோதும் எதிர்பார்த்த விலை கிடைக்காத காரணத்தினால் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்வதில்அக்கறை காண்பிக்கவில்லை என தெரிவித்துள்ளார். (ம-7)

## நீரை சிக்கனமாகப் பயன்படுத்துக பொது மக்களிடம் கோரிக்கை

நிலவும்வறட்சி இரண்டு மாதங்களுக்கு தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில், நீர் விநியோகத்தில் சிக்கல் ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தேவையற்ற விடயங்களுக்கு நீரை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. குருநாகல் - பண்டுவஸ் நுவரவிலுள்ள கொலமுனு ஓயா தற்போது முற்றாக வற்றியுள்ளது. இதனால் பண்டுவஸ்நுவர, பண்டார கொஸ்வத்தை பகுதிகளுக்கு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் பௌசர்களின் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது.

இதே வேளை நீர் வழங்கல் சபைக்கு சொந்தமான நீர் நிலைகளில் 50 வீதம் நீர் குறைவடைந்துள்ளதாக நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ள்து.

எனவே நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னாரில் நிலவும் வறட்சியினால் கோரைக் குளம் பறவைகள் கண்காணிப்பகத்தில் உள்ள குளங்கள் வற்றியுள்ளன. புலம்பெயர் பறவைகள் அதிகளவில் சஞ்சரிக்கும் இடமாகவே கோரைக்குளம் பறவைகள் கண்காணிப்பகம் விளங்குகின்றது.

அத்துடன், மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் கால்நடைகளும் நீரின்றி நடமாடுவதை அவதானிக்க முடிந்தது.

யாழ் சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அராலி பொன்னாலை பகுதிகளில் சிறு கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

### மருத்துவ துறையில் நிலவும்

## வைத்தியர் பற்றாக்குறையைத் தீர்க்க சுகாதார அமைச்சு கடும் பிரயத்தனம்

(கொழும்பு)

நாட்டில் 3000-இற்கும் மேற்பட்ட வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில், 600-க்கும்அதிக விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக அமைச்சு கூறியுள்ளது.

விசேட வைத்திய நிபுணர்களுக்கான பற்றாக்குறையால் சில வைத்திய சாலைகளின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த ஆண்டு இறுதிக்குள் 2000 வைத்தியர்கள்வைத்திய சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதனூடாக விசேட வைத்திய நிபுணர்களுக்கு நிலவும் பற்றாக்குறை பிரச்சினை ஓரளவு நிவர்த்திக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையினால் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒரு வருட காலத்திற்குள் 274 வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியது.

குறித்த காலப் பகுதிக்குள் விசேட தரங்களை சேர்ந்த 842 வைத்திய அதிகாரிகளும் நாட்டை விட்டுச் சென்றுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

10

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இதனால் ஜூன் 2 ஆம் திகதி முதல் அவர் உலக வங்கி தலைவராக செயற்படத் தொடங்கியுள்ளார்.

### இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும்

1950 முதல், இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் 16 கடன் ஏற்பாடுகளை உருவாக்கியுள்ளது. (அவை 1965, 1966, 1968, 1971, 1974, 1979, 1983, 1988,1991, 2001, 2003, 2009 மற்றும் 2016 ஆகும்).சமீபத்திய பிணையெடுப்புகள் (bailouts) அதாவது கடன் ஏற்பாடு 2009 மற்றும் 2016 இல் இருந்தன. இலங்கையின் அண்மைய பின் வரும் நெருக்கடியின் தீவிரத்தை சர்வதேச நாணய நிதியம் (IMF) துல்லியமாக கணித்திருக்கவில்லை. இலங்கையில் பணவீக்க அழுத்தம் அதிகரித்து வரும் கவலைகள் இருந்தபோதிலும், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) ஆளுநரான அஜித் நிவார்ட் கப்ரால், 2022 ஜனவரியில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிவாரணம் தேவையில்லை என்று நம்பிக்கையுடன் கூறினார். அதன் சர்வதேச இறையாண்மைக் கடன்கள் உட்பட அதன் கட்டாய நிலுவைத் தொகையை இலங்கை தீர்க்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆளுநரான அஜித் நிவார்ட் கப்ரால் அவ்வாறு தெரிவித்திருந்தாலும் பெப்ரவரி 2022 இல், இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு $2.36 பில்லியன்களாக குறைந்திருந்தது. மேலும் 2022 யூலைக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய $1 பில்லியன் மதிப்புள்ள இறையாண்மைப் பத்திரங்கள் (sovereign bonds) உட்பட, $7 பில்லியன் வெளிநாட்டுக் கடன்களை இலங்கை செலுத்தவேண்டிய நிலையில் இருந்தது.

கடன் மறுசீரமைப்புக்கான தொழில்நுட்ப ஆதரவு மற்றும் உதவியைப் பெறுவதற்கு உலகளாவிய சட்ட நிறுவனத்தை நியமிக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளை மதிப்பிடுவதற்கும் மீளாய்வு செய்வதற்கும் IMF இன் பிரதிநிதிகள் குழு 2021 டிசம்பர் 7 முதல் 20 டிசம்பர் வரை இலங்கைக்கு விஜயம் செய்தது.

2022 பெப்ரவரி 25 ஆம் திகதி இடம்பெற்ற வருடாந்த கலந்துரையாடல்கள் முடிவடைந்த பின்னர் IMF இன் நிறைவேற்று குழு இலங்கையின் பொருளாதாரம் பற்றி விவாதித்தது. 25 பெப்ரவரி 2022 இல் IMF இலங்கையின் பொதுக் கடன் தாங்க முடியாதது என்று அறிவித்தது. மேலும் பண ஸ்திரமின்மையைத் தடுப்பதற்காக பணத்தை அச்சிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை அரசாங்கத்தை எச்சரித்தது. ஆனால் தொற்றுநோயின் தாக்கத்தைத் தணித்த தடுப்பூசி இயக்கத்தை பாராட்டியது. இலங்கையின் நிலவும் பொருளாதார பேரிடரை IMF மதிப்பிட்டு சில நடைமுறையின் கீழ் 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 2.6 வீதத்தால் வளர்ச்சியடையும் என சர்வதேச நாணய நிதியம் கணித்தது.

மார்ச் 7, 2022 நிலவரப்படி, நாணயத்தை மதிப்பிழக்கச் செய்ய மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அறிவித்தார். மேலும் உத்தியோகபூர்வ ரூபாயின் மதிப்பு வரலாறு காணாத வகையில் அமெரிக்க டொலருக்கு எதிராக 229.99 ரூபாவென சரிவைச்சந்தித்தது. பணமதிப்பிழப்பு முடிவு, சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் பிணை எடுப்பு பெறுவதற்கான நாட்டின் முயற்சியில் பாரிய முன்னேற்றமாக பார்க்கப்பட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர், W. A. விஜேவர்தன, மத்திய வங்கி மேற்கொண்ட பணவியல் கொள்கை முடிவுகளை விமர்சித்தார்.(குறிப்பாக 1 டொலருக்கு 230 ரூபா என்பதை விமர்சித்தார்). அவரின் கருத்துப்படி மிதக்கும் மாற்று விகிதத்தை நடைமுறைப் படுத்தாத வரை அந்நிய செலாவணி நெருக்கடியைத் தீர்க்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்டியது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கருத்து தெரிவிக்கையில் டொலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பிறக்கம் (1 டொலருக்கு 230 ரூபாவென்ற மதிப்பிறக்கம்) வெளிநாட்டு இருப்பு நெருக்கடியைத் தவிர்க்க இன்னும் போதுமானதாக இல்லை என்று கூறினார்.

மார்ச் 2022 இல் ஜனாதிபதி ராஜபக்ஷ தனது அரசாங்கம் IMF உடன் இணைந்து செயற்படும் என்று அறிக்கை வெளியிட்டார். ஏப்ரல் 7 ஆம் திகதி இந்திரஜித் குமாரசுவாமி, சாந்தா தேவராஜன், ஷர்மினி குரே ஆகியோரைக் கொண்ட நிபுணர் ஜனாதிபதி ஆலோசனைக் குழு (expert presidential advisory group) IMF உடனான நடவடிக்கைகள் உட்பட அப்போதைய நிலைமைக்கு உதவுவதற்காக ஜனாதிபதியால் உருவாக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதி வோஷிங்டனில் இலங்கையின் நிதி அமைச்சர் அலி சப்ரியுடன் கடன் பொதி (loan package) மூலம் உடனடி அவசர நிதி உதவியை நாடி பிணை எடுப்பு (bailout) பேச்சு வார்த்தைகள் தொடங்கின. பேச்சு வார்த்தையின் ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் எந்தவொரு கடன்களுக்கும் கடன் நிலைத் தன்மை (debt sustainability) உலகத்திற்கு தேவை என்று வலியுறுத்தியது.

COVID-19 தொற்று நோய்களின் போது நாடுகளுக்கு உதவ சர்வதேச நாணய நிதியம் பயன்படுத்திய விரைவான நிதியளிப்பு கருவி (Rapid Financing Instrument - RFI) கடன் வசதியைப் போலவே இலங்கைக்கான கடன் வசதியையும் பரிசீலித்தது.

இலங்கை அரசாங்கத்தின் முடிவுகள் மற்றும் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திட்டங்களை சர்வதேச நாணய நிதியம் வரவேற்றது. நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கைக் குழுவிற்கும் வோஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான வெற்றிகரமான ஆரம்ப தொழில்நுட்ப கலந்துரையாடலைத் தொடர்ந்து, தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தணிக்கவும் தீர்க்கவும் இலங்கைக்கு IMF ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளது. IMF ஆரம்ப சுற்று விவாதங்கள் பயனுள்ளது என கூறியதுடன், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங் கைக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளது.

ஆரம்ப சுற்று கலந்துரையாடலில் இலங்கையின் அண்மைய பொருளாதார மற்றும் நிதி அபிவிருத்திகள் மற்றும் பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மைய்ய மீட்டெடுப்பதற்கு நம்பகமான மற்றும் ஒத்திசைவான மூலோபாயத்தை நடைமுறைப் படுத்த வேண்டியதன் அவசியம் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### இலங்கைக்கு கிடைக்கவுள்ள 7 பில்லியன் டொலர்கள் - மத்திய வங்கி ஆளுநர் தகவல்

**2022.07.23ஆம் திகதி பத்திரிகையில் வந்த செய்தி.**

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 3 பில்லியன் டொலர்களைப் பெறுவதற்கு இலங்கை தகுதி பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலின் போது இதனைத் தெரிவித்துள்ளார். இந்தக் கடன் 3 வருட காலப்பகுதியில் தவணை முறையில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு பணத்தை வழங்க ஆரம்பித்த பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி (சர்வதேச நாணய நிதியம் வழங்கும் தொகைக்கு மேலதிகமாக) மேலும் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதி என்பது, கடுமையான பணப் பற்றாக்குறை உள்ள நாடுகளுக்கு உதவுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தால் உருவாக்கப்பட்ட ஒரு வசதி ஆகும்.

கடந்த காலங்களில் இலங்கை அதிகாரிகள் செய்த தவறுகளுக்கு பாடம் கற்பதற்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு சந்தர்ப்பம் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை மாற்றியமைக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரிகள் பாடம் கற்று, சரியான திசையில் செல்வதற்கும் சர்வதேச நாணய நிதிய திட்டத்திற்கு அப்பால் செல்வதற்கும் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் பல தசாப்தங்களாக நடந்து வரும் நிதி முறைகேடுதான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தங்கமும் நாணயச் செலாவணியும்

ஒவ்வொரு நாட்டின் நாணயச் செலாவணியிலும் (பண மதிப்பு) தங்கம் பெரும்பங்கு வகிக்கிறது. அந்தந்த நாட்டின் செலாவணியை குறிப்பிட்ட எடையளவு தங்கத்திற்கு மதிப்பிடுவார்கள். ஒவ்வொரு நாடும் அதன் மத்திய வங்கியில் தங்கத்தை கையிருப்பில் வைத்திருக்கும்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்...

28 ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் தற்போதைய துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ம-7)

## மிருசுவிலில்...

வீட்டின் பின்புறமாக நின்ற மாமரத்தில் தூக்கிட்ட நிலையில் அவர் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் குறித்த மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## 13ஆவது...

பதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சில சமயங்களில் உள்ளூராட்சி மன்றம், மாகாண சபை, மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளாலும் ஒரே மாதிரியான சேவைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக வடிகால் வெட்டுதல், மின் கம்பம் நடல், வீதிகள் அமைத்தல் போன்றவற்றை சுட்டிக் காட்டலாம். இவ்வாறு நடப்பதால் பெருமளவு பணம் வீணாகிறது.

அப்படியானால், இந்த மூன்று பொறிமுறைகளின் செயற்பாட்டை மையமாகக் கொண்டு ஒரு புதிய பொறிமுறையை அமைக்க வேண்டும். மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாதத்திற்கு முன்னர் அதற்கான புதிய பொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

மாகாண சபைகள் இயங்காததாலும் மாகாண சபைகளில் அமைச்சர்கள் இல்லாததாலும் இன்று மாகாண சபை முறைமையில் மாகாண ஆளுநர்களாகிய உங்களுக்கே முழுமையான ஆட்சி அதிகாரம் உள்ளது.

மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து, ஒரு மாதத்திற்குள் அதற்கான புதிய கட்டமைப்பைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

குறிப்பாக கீழ்மட்ட சேவைகள் மாகாண சபைகள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகிறன. மாவட்ட அளவிலான சேவைகள் மத்திய அரசின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த சேவைகளை வழங்கும் போது அதிகாரப் போட்டியின்றி கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றம் அடுத்த வருட இறுதி வரை செயற்படும் என்பதால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை நிர்வாக செயற்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

ஆளுநருடன் இணைந்து செயற்பட விசேட ஆலோசனைக் குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம்தொடர்பான மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது" என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## யாழில்...

வீடுகளுக்குள் புகுந்து அட்டூழியத்தில் ஈடுபட்டு வந்த வன்முறைக் கும்பலைச் சேர்ந்த 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நபர்களை கொலை செய்ய எத்தனித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 9 பேரும் இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய், கல்வியங்காடு மற்றும் கீரிமலை பிரதேசங்களில் இரவு வேளையில் வீடுகளுக்குள் புகுந்து கும்பல் ஒன்று அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் தாக்குதல்களை நடாத்தியும் பெறுமதியான பொருட்களை சேதமாக்கியும் அட்டூழியத்தில் ஈடுபட்டு வந்தது.

அண்மையில் கல்வியங்காட்டில் வன்முறைக் கும்பலைச் சேர்ந்தோர் சல்வார் ஆடையை அணிந்தவாறு தாக்குதலில் ஈடுபட்டமை சிசிரிவி கமரா பதிவில் வெளிப்பட்டது.

இந்த தாக்குதல்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 3 மோட்டார் சைக்கிள்கள், 2 வாள்கள், கைக்கோடரி ஒன்றும் மடத்தல் ஒன்றும் தாக்குதல்களுக்கு அணிந்து சென்ற பெண்களின் ஆடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடு மீதான தாக்குதலுக்கு டென்மார்க்கில் வசிக்கும் விஸ்வநாதன் என்பவரே காரணம் என்றும் அவர் தமக்கு பணம் அனுப்பியதாகவும் முதன்மை சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ம-7,33)

## ஆதிசிவன்...

பொங்கல் நிகழ்வுகளை முன்னிட்டு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது

இந்தநிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் தொல்பொருள் திணைக்களத்தின் விதிகளுக்கு அமைவாக ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் நிலத்தில் கல்லு வைத்து அதன்மேல் தகரம் வைத்து அதற்கு மேல் கல் வைத்து பொங்கல் பொங்கினார்கள்.

ஒரு இடத்திலேயே நெருப்பு மூட்ட அனுமதி வழங்கப்பட்ட அதேவேளை ஏனைய பக்தர்கள் பொங்கல் பொங்க அனுமதிக்கப்படவில்லை. ஒரு இடத்தில் நெருப்பு மூட்டி இரண்டு தடவைகள் பானையில் பொங்கல் பொங்கி படைத்து வழிபாடுகளை மேற்கொண்டனர்.

ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் பொங்கல் பொங்கி படைத்து பூசை வழிபாடுகளை மேற்கொண்டு பிரசாதங்களை பரிமாறினர். இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான கந்தையா சிவநேசன், துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என சுமார் 500 பேர் வரையில் கலந்து கொண்டனர். (ம-7,299)

## பொங்கலை...

செய்தார்.

இதனால் அங்கு பதற்றநிலையானது தோன்றியது. பிக்குவின் செயற்பாட்டுக்கு அங்கிருந்த தமிழ்மக்கள் கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

அங்கு கடமையிலிருந்த பொலிஸார் நிலைமையினை கட்டுப்படுத்தி பௌத்த பிக்குவை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தினர். (ம-7,299)

## ஏட்டிக்குப் போட்டி...

கள் மேற்கொள்ளப்பட இருந்த நிலையில் காலையிலேயே தென்பகுதியிலிருந்து ஐந்து பேருந்துகளில் நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் மற்றும் பௌத்த துறவிகள் வருகை தந்து குருந்தூர்மலையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ம-7,299)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

மெகா பவர்
திகதி 18/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1558
W 01 43 50 58 60
09993

தன நிதானய
திகதி - 2023.08.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1240
N 08 22 42 77 N
16033

லக்கி 7
திகதி 18.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0036
L7 இலக்கம் 3 2
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 5 0 5 4 8 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3452
சீட்டிழுப்பு திகதி 18.08.2023
K 07 61 77 80
K 26325

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2023.08.18
சீட்டிழுப்பு இலக்கம் 519
மீனம் 05 23 37 55 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/18
சீட்டிழுப்பு இலக்கம் 5210
K 4 4 9 0 0 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2184 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.18 தினம் வெள்ளிக்கிழமை
01 08 15 42 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,748,868.40
40 43 48 65 Q

சனிதா
திகதி 2023.08.18 வெற்றி வாரம் 4345 வர்ணம் செம்மஞ்சள்
19 41 51 64 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,666,620.00
36 38 46 62 Y

சசிரி
வெற்றி வாரம் 364
சீட்டிழுப்பு திகதி 2023.08.18
21 | 23 | 48
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,345,760/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3896 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.18 தினம் வெள்ளிக்கிழமை
12 18 28 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,723,096/-
19 31 51 62

கப்ருக
திகதி 18.08.2023 வெற்றி வாரம் 1360
N 35 32 39 52 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.429,679,504.20
05 10 31 43 E
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அட கோடீபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2010
சீட்டிழுப்பு திகதி : 2023.08.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,439,336/-
38 54 56 65 K
21 35 42 72 P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

உரும்பிராயில் இயங்கி வரும் Super Market ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

**Billing Cashier - பெண்கள் (Full Time)**

வயது எல்லை : 22-30

சுயவிபரக் கோவையை 077 121 5548 Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. 077 121 5548

# இலங்கை தனது முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் வலியுறுத்து

(கொழும்பு)

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை அனுகலை இழந்தால், நாடு அதன் பிராந்திய நாடுகளை விட கணிசமாக பின்தங்கக்கூடும் என்பதால், உலகளாவிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதில் இலங்கை தனது முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் இலங்கை மோட்டார் வர்த்தகர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றின்போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கையை முக்கிய சந்தைகளில் ஒருங்கிணைப்பது பிளஸ் என்றும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் புறக்கணிப்பது நாட்டை குறிப்பிடத்தக்க பாதகத்திற்கு உள்ளாக்கக்கூடும்.

வர்த்தகத்தைப் பொறுத்தவரையில் இலங்கையில் போதுமான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் இல்லை எனவே இலங்கை, ஜி.எஸ்.பி பிளஸிலிருந்து வெளியேறியவுடன், விரிவான வர்த்தக ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால், மட்டுப்படுத்தப்பட்ட சந்தை அணுகலை எதிர்கொள்ள நேரிடும்.

எனினும் ஐரோப்பிய ஆணையம் சமீபத்தில் தற்போதைய ஜி.எஸ்.பி பிளஸ் திட்டத்தை 2027 டிசம்பர் 31 வரை நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்க முன்மொழிந்துள்ளதால், இடைக்காலமாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான முன்னுரிமை அணுகலை இலங்கை இழக்காது என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு காட்வெயர் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பணியாளர்கள் தேவை.

- மனேஜர் Lanka Tile Showroom ஆண்; சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்
- Lanka Tile விற்பனையாளர் ஆண்
- விற்பனைப் பிரதிநிதி சீமெந்து ஆண்
- கணக்குப்பதிவாளர் ஆண்/ பெண்

மேற்படி பணிகளுக்கு ஆட்கள் தேவை.
தங்களின் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் அளிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
குறிப்பு: நிறுவனத்தில் இருந்து 5 km சுற்றளவு தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடித்தவர்களும் விரும்பத்தக்கது.

குரு காட்வெயர்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
077 743 5265

## குருந்தூர்...

ஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

பொங்கல் நிகழ்விற்காக சென்ற மக்கள் அனைவரும் பொலிஸாரினால் பதிவுசெய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள்.

நேற்று குமுழமுனை ஊடாக தண்ணிமுறிப்பு செல்லும் வீதியில் அதிகளவில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் வீதியால் பயணிக்கும் அனைவரும் பொலிஸாரினால் தீவிரமாக கண்காணிக்கப்பட்டார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருந்து சுமார் 300 வரையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனைவிட சிங்கள மக்கள் வழிபாடுகளை மேற்கொண்ட விகாரை அமைந்துள்ள பகுதியினை சுற்றி அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆதிசிவன் ஆலய பொங்கலுக்கு சென்ற பக்தர்களை சுற்றியும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குருந்தூர் மலையில் கலகம் அடக்கும் பொலிஸாரும் கண்ணீர்புகை குண்டு துப்பாக்கிகள் சகிதம் பாதுகாப்பு கடமையில் இருந்துள்ளதுடன் துப்பாக்கி ஏந்திய அதிகளவான சிறப்பு அதிரடிப்படையினரும் ஆதிசிவன் பொங்கல் நிகழ்வின் பக்த அடியார்களை சுற்றி பாதுகாப்பு கடமையில் நின்றமையினையும் அவதானிக்க முடிந்துள்ளது.

இரு மத வழிபாடுகள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் இருபகுதியினரும் மற்றைய பகுதிகளுக்கு செல்லவிடாது பொலிஸார் கடமைகளில் நிறுத்தப்பட்டிருந்தனர். (ம-7,104,299)

## காணி விற்பனைக்கு

பளை புலோப்பளையில் வீதி அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. வயலும் விற்பனைக்கு உண்டு.

076 564 7848

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

T.P:077 544 8503

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. புகையிரத நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில்

தொடர்பு

075 521 3533

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு நிலப்பரப்பு

- மெயின் றோட் முகப்புடன் காபற் வீதி.
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 K மீற்றர் தூரம்
- நான்கு நான்கு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை (5 இலட்சம் ரூபாய்)
- பின் பக்கம் உள்ள காணி 1 பரப்பு 250,000 (இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) மட்டும்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று

076 057 0354, 076 826 0354

## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE
0777-068-777
V2 TRAVELS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 51 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.



- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு:- குரு

077 623 4204, 077 288 0152, 077 076 0389

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg சீனி | - 245/= (max 2kg) |
| 1 Kg றவை | - 288/= |
| 1 Kg கோதுமை மா | - 185/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= |
| 1 Kg அரிசி மா | - 169/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 148/= |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= ~~(1080/=)~~ |
| 400g Anlene | - 1250/= ~~(1350/=)~~ |
| 1 Kg Sunlight powder rose | - 360/= ~~(430/=)~~ |
| அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org